©
GOVERNMENT OF TAMIL NADU
2016

**[Regd. No. TN/CCN/467/2012-14.**
**[R. Dis. No. 197/2009.**
**[Price: Rs. 6.40 Paise.**

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**EXTRAORDINARY** PUBLISHED BY AUTHORITY

No. 204] CHENNAI, MONDAY, SEPTEMBER 12, 2016
Aavani 27, Thunmugi, Thiruvalluvar Aandu–2047

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

## NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

### TAMIL NADU STATE ELECTION COMMISSION, CHENNAI.

[THE TAMIL NADU LOCAL BODIES ELECTION SYMBOLS (RESERVATION AND ALLOTMENT) ORDER, 2016.]

*(S.O. No.17/2016/TNSEC/EG1.)*

READ:

S.O. No. 25/2011/TNSEC/EG-2, dated the 9th September, 2011.

**No. VI(2)/120(b)/2016.**

*An order to provide for specifications, reservation, choice and allotment of symbols at elections to local bodies in the State of Tamil Nadu and for matters connected therewith*.

WHEREAS, the superintendence, direction and control of all elections to local bodies in the State of Tamil Nadu are vested in the Tamil Nadu State Election Commission (hereinafter referred to as 'the State Election Commission') by the Constitution of India, the Tamil Nadu Panchayats Act, 1994 (Tamil Nadu Act 21 of 1994), the Chennai City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919), the Madurai City Municipal Corporation Act, 1971 (Tamil Nadu Act XV of 1971), the Coimbatore City Municipal Corporation Act, 1981 (Tamil Nadu Act XXV of 1981), the Tiruchirapalli City Municipal Corporation Act, 1994 (Tamil Nadu Act 27 of 1994), the Tirunelveli City Municipal Corporation Act, 1994 (Tamil Nadu Act 28 of 1994), the Salem City Municipal Corporation Act, 1994 (Tamil Nadu Act 29 of 1994), Tiruppur City Municipal Corporation Act, 2008 (Tamil Nadu Act 7 of 2008), the Erode City Municipal Corporation Act, 2008 (Tamil Nadu Act 8 of 2008), the Vellore City Municipal Corporation Act, 2008 (Tamil Nadu Act 26 of 2008), the Thoothukudi City Municipal Corporation Act, 2008 (Tamil Nadu Act 27 of 2008), the Thanjavur City Municipal Corporation Act, 2013 (Tamil Nadu Act 24 of 2013), the Dindigul City Municipal Corporation Act, 2013 (Tamil Nadu Act 25 of 2013) and the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920) (hereinafter referred to as 'the Acts');

AND WHEREAS, it is necessary and expedient to provide in the interest of purity of elections to the local bodies in the State of Tamil Nadu and in the interest of the conduct of such elections in a fair and efficient manner, for the specification, reservation, choice and allotment of symbols and for matters connected therewith:

NOW, THEREFORE, in exercise of the powers conferred by Articles 243 K and 243 ZA of the Constitution of India read with relevant sections of the Acts, and rules 33, 34 and 35 of the Tamil Nadu Panchayats (Elections) Rules, 1995, rules 31, 32 and 33 of the Tamil Nadu Town Panchayats, Third Grade Municipalities, Municipalities and Corporations (Elections) Rules, 2006 and, in pursuance of the orders of Hon'ble High Court dated 1.10.2001 on the Writ Petition Nos. 17248, 17685, 17886, 17893, 17984 and 18095 of 2001 and the orders of the Hon'ble High Court dated 23.8.2006 on the Writ Appeal Nos. 2226 to 2229/2001 filed by the Tamil Nadu State Election Commission and in supersession of the State Election Commission's Notification No. 321 published at pages 2 to 17 of Part VI-Section 2 No.VI(2)/445(e-2)/2011 of the *Tamil Nadu Government Gazette,* dated 12.9.2011, the State Election Commission hereby makes the following order:-

***1. Short title, application and commencement*.-** (1) This Order may be called the *Tamil Nadu Local Bodies Election Symbols (Reservation and Allotment) Order, 2016.*

(2) It shall apply to all elections held under the Acts.

(3) It shall come into force at once.

***2. Definition and Interpretation*.-** (1) In this Order, unless the context otherwise requires,-

(a) "Contested election" means an election where a poll is taken;

(b) "Election" means an election held under the Acts;

(c) "Form" means a form appended to this Order;

(d) "Free symbol" means a symbol other than a reserved symbol;

(e) "Government" means the Government of Tamil Nadu;

(f) "Local bodies" means and includes all the Village Panchayats, Panchayat Unions, District Panchayats, Town Panchayats, Third Grade Municipalities, Municipalities and Municipal Corporations;

(g) "Ordinary election" means an election held to fill up a vacancy occurring by efflux of time; and

(h) 'Political party' means an association or a body of individual citizens of India registered with the Election Commission of India as a political party under Section 29A of Representation of the People Act, 1951.

(i) "Reserved symbol" means a symbol which is reserved by the Election Commission of India for exclusive allotment to a contesting candidate set up by a recognised political party.

(j) "Recognised political parties" means and includes every political party which has been recognised by the Election Commission of India as a National Party or as a State Party in the State of Tamil Nadu under the Election Symbols (Reservation and Allotment) Order, 1968;

(k) "Registered - Unrecognised political party" means and includes

(i) every political party which had previously been recognised by the Election Commission of India as a National Party under the Election Symbols (Reservation and Allotment) Order, 1968 and subsequently lost its status as National Party'

(ii) every political party which has been recognised by the Election Commission of India as a State Party in any State other than Tamil Nadu under the Election Symbols (Reservation and Allotment) Order, 1968; and

(iii) every political party having its head Office in the State of Tamil Nadu which is registered with the Election Commission of India but not recognised either as a National Party or as a State Party in Tamil Nadu by the Election Commission of India under the Election Symbols (Reservation and Allotment) Order 1968;

(iv) political parties registered with the Election Commission of India and having their head office in other States and have not been recognized either as a National Party or as a State Party by the Election Commission of India under the Election Symbols (Reservation and Allotment) Order, 1968; provided such parties should make an application to the Tamil Nadu State Election Commission with its office address in Tamil Nadu, bye-laws, office bearers, etc.

(2) Words and expressions used but not defined in this Order but defined in the Tamil Nadu Panchayats Act, 1994 (Tamil Nadu Act 21 of 1994) or the rules made there under or in the Chennai City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919) or in the Madurai City Municipal Corporation Act, 1971 (Tamil Nadu Act XV of 1971) or in the Coimbatore City Municipal Corporation Act, 1981 (Tamil Nadu Act XXV of 1981) or in the Tiruchirapalli City Municipal Corporation Act, 1994 (Tamil Nadu Act 27 of 1994) or in the Tirunelveli City Municipal Corporation Act, 1994 (Tamil Nadu Act 28 of 1994) or in the Salem City Municipal Corporation Act, 1994 (Tamil Nadu Act 29 of 1994) or in the Tiruppur City Municipal Corporation Act, 2008 (Tamil Nadu Act 7 of 2008) or in the Erode City Municipal Corporation Act, 2008 (Tamil Nadu Act 8 of 2008) or in the Vellore City Municipal Corporation Act, 2008 (Tamil Nadu Act 26 of 2008) or in the Thoothukudi City Municipal Corporation Act, 2008 (Tamil Nadu Act 27 of 2008) or in the Thanjavur City Municipal Corporation Act, 2013 (Tamil Nadu Act 24 of 2013) or in the Dindigul City Municipal Corporation Act, 2013 (Tamil Nadu Act 25 of 2013) or in the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920) or rules made there under shall have the meaning respectively assigned to them in those Acts and rules.

(3) In the absence of such definitions, the Tamil Nadu General Clauses Act, 1891(Tamil Nadu Act 1 of 1891) shall, as far as may be, apply in relation to the interpretation of this Order as it applies in relation to the interpretation of a Tamil Nadu Act.

***3. Notification by the State Election Commission of elections to be held on party-basis.-***For the purposes of this Order, the State Election Commission shall, in consultation with the Government, notify from time to time the election or elections which shall be held on party-basis and the election or elections which shall not be held on party-basis.

***4. Notification by the State Election Commission of the list of recognised political parties and their symbols, the list of registered - unrecognised political parties and the list (s) of free symbols.-*** The State Election Commission shall notify from time to time a list of recognised political parties, the symbols respectively reserved for them and a list of registered - unrecognised political parties and the list or lists of free symbols.

**5.** ***Allotment of Symbols.-*** In every contested election, a symbol shall be allotted to a contesting candidate in accordance with the provisions of this Order and different symbols shall be allotted to different contesting candidates.

***6. Allotment of Symbols in Elections not held on party-basis.-*** (1) In every contested election not held on party-basis, symbols shall be allotted to the candidates in the sequence of the symbols in the list of free symbols meant for that election by drawing lots.

*Example.*-If election of member of a ward of a Village Panchayat is not held on party-basis and if there are five candidates and if the first five symbols in the list are, say, (1) “Key”, (2)” Comb”, (3) “Cot”, (4) “Car” and (5) “Conch”, then these five symbols should be taken for allotment and assigned to the five candidates by drawing lots. The candidate whose name is drawn first shall get the symbol “Key” and the candidate whose name is drawn next shall get the symbol “Comb” and so on. If there had been only three candidates in the above example, only “Key”, “Comb” and “Cot” could be allotted in that order.

(2) In such election, the allotment of symbol shall be done only by drawing lots even if the contesting candidates agree among themselves upon their symbols.

***7. Allotment of Symbols in Elections held on party basis.-*** (1) In an election held on party-basis, a candidate set up by a recognised political party shall choose, and shall be allotted, the symbol reserved for that party and no other symbol:

Provided that when there are conflicting claims for any such reserved symbol due to defect of substantial character either in the nomination paper or in Form B or Form C filed, none of the claimants shall be allotted that reserved symbol and all the claimants shall be treated as independent candidates and allotted the free symbols left after allotting to all other candidates in that election:

Provided further that no reserved symbol shall be sought or allotted in an election, to any candidate other than a candidate set up by a recognised political party to which that symbol has been reserved, even if no candidate has been set up by that recognised political party in that election.

***(2)*** **Choice of symbol by candidates set up by registered - unrecognised political parties and by independent candidates .-** Every independent candidate, shall declare in the nomination paper first filed by him or on his behalf, his choice of three free symbols from the list of free symbols for that election indicating the order of his preference. Every candidate who is set up by the registered - unrecognised political party shall declare in the nomination paper first filed by him or on his behalf, his choice of three free symbols collectively from the list of free symbols notified for the party based elections. The symbols shall be allotted in accordance with the procedure laid down below:-

(a) The allotment of symbols shall be considered in the order of preference made by the candidates, that is to say, the first preference of the candidates will be considered first, the second preference next and the third preference last:

Provided that the allotment of symbols to candidates set up by the registered - unrecognised political parties shall be completed first and only thereafter the allotment of symbol to the independent candidates shall be taken up and allotted from among the remaining free symbols.

(b) Where a free symbol has been sought for by only one candidate set up by a registered-unrecognised political party, as his first choice, it shall be allotted to that candidate and to no one else. If any free symbol has been sought for by more than one candidate set up by the registered-unrecognised political parties, the allotment of that symbol shall be decided by drawing a lot among these candidates and the candidate whose name is drawn first shall be allotted that symbol.

(c) If any candidate set up by registered - unrecognised political party could not be allotted the symbol sought for in his first preference in the lot, he shall be considered for allotment of the free symbol sought for, as his second preference. Should the second choice of symbol could also not be allotted, due to conflicting claims for that symbol and failure in the lot, he shall be considered for the allotment of the free symbol of his third preference. Even if this could not be allotted, he should be allotted by drawing a lot, any one of the free symbols left after allotting to other candidates set up by the registered - unrecognised political parties in accordance with the procedure set out above.

(d) After completing the allotment of free symbols to all the candidates set up by the registered - unrecognised political parties, the remaining free symbols shall be allotted to the independent candidates in accordance with their choice and preference by adopting the procedures for allotment of symbols to candidates set up by the registered - unrecognised political parties.

***8. When a candidate shall be deemed to be set up by a political party.-*** (1) For the purposes of this Order, a candidate shall be deemed to be set up by the political party if, and only if-

(a) the candidate has enclosed a declaration to that effect in Form C along with the nomination paper;

(b) a notice in writing in Form B to that effect has, not later than 3.00 p.m. on the last date for withdrawal of candidature, been delivered to the Returning Officer;

(c) the said notice is either signed by the President, the Secretary or any other office bearer and who has been authorised by the party in this behalf or any other person who has been authorised by such office bearer, to send the notice; and

(d) the communication in Form A with regard to the name and specimen signature of such authorised person are delivered to the Returning Officer not later than 3.00 p.m. on the last date for withdrawal of candidature.

(2) (a) The communication in Form A shall be signed by the President, the Secretary or any other office bearer and who has been authorised by the party in this behalf to send such communication:

Provided where the notice in Form B is signed by any such office bearer authorised by the Party, Form A need not be insisted upon.

(b) Form C shall be signed in ink, while printed/cyclostyled/photocopies of Forms A and B with facsimile signature can be presented.

***9. When splinter groups or rival groups claim to be that party.-*** If in an election to the local bodies held on party-basis, rival sections or groups of a recognised political party claim to be that party, the State Election Commission may decide on allotment of symbols to the candidates sponsored by such sections or groups and the State Election Commission's decision shall be final.

***10. When two or more recognised political parties amalgamate into a new party.-*** If in an election to the local bodies held on party-basis, two or more recognised political parties join together to form a new political party but the recognition for it under the Election Symbols (Reservation and Allotment) Order, 1968, is pending before the Election Commission of India, the new party may be allotted by the State Election Commission any of the reserved symbols already allotted to the constituent parties, provided a request in writing for such an allotment is made jointly by the Chief Executive Officers of all the constituent recognised parties.

***11. Power of State Election Commission to issue instructions and directions.-***The State Election Commission may issue instructions and directions-

(a) for the clarification of any of the provisions of this Order;

(b) for the removal of any difficulty which may arise in relation to the implementation of any such provision; and

(c) in relation to any matter with respect to the reservation and allotment of symbols for which this Order makes no provision or makes insufficient provision, and the provision is, in the opinion of the State Election Commission, necessary for the smooth and orderly conduct of elections.

## FORM A

**Communication with Regard to Authorised Persons to Intimate Name of Candidate Set up by the Recognised/Registered - Unrecognised Political Party.**

*[See paragraph 8 (1) (d) and 8 (2) (a) of the Tamil Nadu Local Bodies Election Symbols (Reservation and Allotment) Order, 2016]*

From

The President / Secretary/Office bearer,

........................................... Party,

............................................

............................................

To

The Returning Officer for the

…………. Ward No. ............................................ Panchayat Union/District Panchayat.

..................Ward No. Town Panchayats/ Third Grade Municipality/Municipality/Municipal Corporation

Sir,

Subject: Elections to ............................................................................ Allotment of Symbols -Authorisation of persons to intimate names of candidates.

* * *

In pursuance of sub-paragraphs (1) (d) and (2)(a) of paragraph 8 of the Tamil Nadu Local Bodies Election Symbols (Reservation and Allotment) Order, 2016, I hereby communicate that the following person(s) has/have been authorised by the party, which is a Recognised political Party, to intimate the name(s) of the candidate(s) proposed to be set up by the party at the election(s) cited above.

| *Name of person authorised to send notice* | *Name of Office held in the party.* | *The local body/ local bodies in respect of which he has been authorised.* | *Specimen signature of the person authorised to send notice in Form B.* |
|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* |
| 1. | | | (i) ... ... ... ... ... |
| | | | (ii) ... ... ... ... ... |
| | | | (iii) ... ... ... ... ... |
| 2. | | | (i) ... ... ... ... ... |
| | | | (ii) ... ... ... ... ... |
| | | | (iii) ... ... ... ... ... |
| 3. | | | (i) ... ... ... ... ... |
| | | | (ii) ... ... ... ... ... |
| | | | (iii) ... ... ... ... ... |
| 4. | | | (i) ... ... ... ... ... |
| | | | (ii) ... ... ... ... ... |
| | | | (iii) ... ... ... ... ... |
| 5. | | | (i) ... ... ... ... ... |
| | | | (ii) ... ... ... ... ... |
| | | | (iii) ... ... ... ... ... |

Place:................
Date:.................

Seal of the Party

Yours faithfully,
President/Secretary/Office bearer
.............................................Party

(N.B.: This shall be delivered to the Returning Officer not later than 3.00 P.M. on the last date for withdrawal of candidature)

**FORM B**

**Notice as to Name of Candidate Set Up by the Recognised Political Party / Registered - Unrecognised Political Party**

*[See Paragraph 8 (1) (b) (c) of the Tamil Nadu Local Bodies Election Symbols (Reservation and Allotment) Order, 2016]*

From

.......................................................... ,

.................................................. Party,

.............................................................

.............................................................

To

The Returning Officer for the .........Ward No. ...................................................... Panchayat Union/District Panchayat / ................................................................Ward No. Town Panchayats/ Third Grade Municipality/Municipality/Municipal Corporation

Sir,

Subject: Election(s) to ........................................................................................... - Name(s) of candidate(s) - Intimated.

* * *

In pursuance of sub-paragraphs (1) (b) and (1) (c) of paragraph 8 of the Tamil Nadu Local Bodies Election Symbols (Reservation and Allotment) Order, 2016, I hereby give notice that the following person(s) has / have been set up by our party as its candidate(s) at the ensuing Local Bodies Election.

| | | |
|---|---|---|
| (1) | Name of the ward/ local body | ......................................................................... |
| (2) | Name of the approved Candidate | .......................................................................... |
| (3) | Father's/ Husband's name of approved candidate. | ......................................................................... |
| (4) | Postal address of approved Candidate | .........................................................................<br>.........................................................................<br>......................................................................... |
| (5) | Name of the substitute candidate | ......................................................................... |
| (6) | Father's/Husband's name of substitute candidate | ......................................................................... |
| (7) | Postal address of substitute candidate. | .........................................................................<br>.........................................................................<br>......................................................................... |

It is certified that each of the candidates whose name is mentioned above, is a member of this political party and his name is duly borne on the rolls of the members of this party.

Place:................ (Seal of the Party) Yours faithfully,

Date:................. President/Secretary/Office bearer/Authorised Person

................................................................Party

N.B.: (1) A substitute candidate shall step-in in the event of the approved candidate's nomination being rejected on scrutiny or his withdrawing from the contest.

(2) This shall be delivered to the Returning Officer not later than 3.00 P.M. on the last date for withdrawal of candidature.

**FORM C**

**Declaration by a Candidate Set Up by the Recognised Political party / Registered - Unrecognised Political party**

[*See paragraph 8 (1) (a) of the Tamil Nadu Local Bodies Election Symbols (Reservation and Allotment) Order, 2016]*

I, ....................................., a candidate for the election of Member/ Councillor to the Ward No……….......... of ............................................ Panchayat Union / District Panchayat / Town Panchayat / Third Grade Municipality / Municipality / Municipal Corporation hereby declare that I have been set up at this election by .......................................................... Party, which is a recognised political party/ registered - unrecognised political party.

Signature of the Candidate

Place :

Date:

N.B. : Form shall be signed in ink.

---

(By Order of the Tamil Nadu State Election Commission)

Chennai-600 106,
9th September 2016.

T.S. RAJASEKAR,
*Secretary,*
*Tamil Nadu State Election Commission.*

# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் தேர்தலுக்கான சின்னங்கள் (ஒதுக்கீடு மற்றும் பங்கீடு) ஆணை, 2016

## தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் சின்னங்கள் தொடர்புடைய வரண்முறை, ஒதுக்கீடு, விருப்பேற்பு மற்றும் சின்னங்களைப் பங்கிட்டு அளித்தல் ஆணை.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியும், 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் (1994 தமிழ்நாடு சட்டம் 21), 1919-ஆம் ஆண்டு சென்னை நகர மாநகராட்சி சட்டம் (1919 தமிழ்நாடு சட்டம் IV) 1971-ஆம் ஆண்டு மதுரை நகர மாநகராட்சி சட்டம் (1971 தமிழ்நாடு சட்டம் XV), 1981-ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகர மாநகராட்சி சட்டம் (1981 தமிழ்நாடு சட்டம் XXV), 1994-ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி நகர மாநகராட்சி சட்டம் (1994 தமிழ்நாடு சட்டம் 27), 1994-ஆம் ஆண்டு திருநெல்வேலி நகர மாநகராட்சி சட்டம் (1994 தமிழ்நாடு சட்டம் 28), 1994-ஆம் ஆண்டு சேலம் நகர மாகராட்சி சட்டம் (1994 தமிழ்நாடு சட்டம் 29), 2008-ஆம் ஆண்டு திருப்பூர் நகர மாநகராட்சி சட்டம் (2008 தமிழ்நாடு சட்டம் 7), 2008-ஆம் ஆண்டு ஈரோடு நகர மாநகராட்சி சட்டம் (2008 தமிழ்நாடு சட்டம் 8), 2008-ஆம் ஆண்டு வேலூர் நகர மாநகராட்சி சட்டம் (2008 தமிழ்நாடு சட்டம் 26), 2008-ஆம் ஆண்டு தூத்துக்குடி நகர மாநகராட்சி சட்டம் (2008 தமிழ்நாடு சட்டம் 27), 2013-ஆம் ஆண்டு தஞ்சாவூர் நகர மாநகராட்சி சட்டம் (2013 தமிழ்நாடு சட்டம் 24), 2013-ஆம் ஆண்டு திண்டுக்கல் நகர மாநகராட்சி சட்டம் (2013 தமிழ்நாடு சட்டம் 25) மற்றும் 1920-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் (1920 தமிழ்நாடு சட்டம் V) ஆகிய சட்டங்களின்படியும் தமிழ்நாட்டிலுள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கான அனைத்து தேர்தல்களும் “தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்தின் (இனிவரும் இடங்களில் “மாநிலத் தேர்தல் ஆணையம்” எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) மேற்பார்வையிலும், இயக்கத்திலும், கட்டுப்பாட்டிலும் நடைபெற பொறுப்பு அளிக்கப்பட்டுள்ளதாலும்,

தமிழ்நாடு மாநிலத்திலுள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்கள் நியாயமாகவும், நேர்மையாகவும், திறமையாகவும் நடைபெற அதன் தொடர்புடைய தேர்தல் சின்னங்கள் குறித்த வரண்முறைகள், ஒதுக்கீடு, விருப்பேற்பு மற்றும் சின்னங்களைப் பங்கிட்டு அளித்தலுக்கு வகை செய்து கொடுத்தல் இன்றியமையாதது ஆகும். ஆகவே, இந்திய அரசியலமைப்பின் பிரிவுக்கூறுகள் 243 K மற்றும் 243 ZA படி, அதனுடன் சம்பந்தப்பட்ட சட்டப்பிரிவுகளின்படியும் மற்றும் 1995-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (தேர்தல்கள்) விதிகளில் விதிகள் 33, 34 மற்றும் 35-ன்படியும், 2011-ஆம் ஆண்டு தமிழ்நாடு பேரூராட்சிகள், மூன்றாம் நிலை நகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சி (தேர்தல்கள்) விதிகளில், விதிகள் 31, 32 மற்றும் 33-ன்படியும் வழங்கப்பட்ட அதிகாரத்திற்குட்பட்டும், மேலும் நீதிப்பேராணை மனுக்களில் [எண்கள் 17248, 17685, 17886, 17893, 17984 மற்றும் 18095/2001] சென்னை உயர்நீதி மன்றம் 1.10.2001ல் வழங்கிய ஆணை மற்றும் தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்தால் தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை மேல்முறையீட்டில் [வழக்கு எண். 2226 முதல் 2229/2001] வழங்கிய 23.8.2006 நாளிட்ட தீர்ப்பின் அடிப்படையிலும் மற்றும் *தமிழ்நாடு அரசிதழ்* எண்.321, நாள் 12.9.2011 ல் பாகம் VI-ல் பிரிவு 2 எண்.445(e-2)/2011 பக்கம் 2-17-ல் வெளியிடப்பட்ட அறிவிப்பினை அகற்றி அதற்குப்பதிலாக மாநிலத் தேர்தல் ஆணையம் கீழ்வரும் செயல் ஆணையைப் பிறப்பிக்கின்றது :-

1. **சிறு தலைப்பு, செயற்படுத்தல் மற்றும் நடைமுறைக்கு வருதல்** .-

(1) இந்த ஆணை, 2016- ம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் தேர்தலுக்கான சின்னங்கள் (ஒதுக்கீடு மற்றும் பங்கீடு) ஆணை என்றழைக்கப்படும்.

(2) மேற்குறிப்பிட்ட சட்டங்களின் கீழ் நடைபெறும் அனைத்துத் தேர்தல்களுக்கும் இவ்வாணை பொருந்தும்.

(3) இவ்வாணை உடனடியாக நடைமுறைக்கு வருகின்றது.

2. **பொருள் வரையறையும் பொருள் விளக்கமும்** .- (1) **இவ்வாணையில் சந்தர்ப்பங்களுக்கேற்ப வேறு விளக்கம் தேவைப்பட்டாலன்றி** , -

(அ) “போட்டியுள்ள தேர்தல்” என்பது வாக்கெடுப்பு தேவைப்படும் தேர்தலாகும்.

(ஆ) “தேர்தல்” என்பது மேற்குறிப்பிட்ட சட்டங்களின் கீழ் நடைபெறும் தேர்தலாகும்.

(இ) “படிவம்” என்பது இவ்வாணையில் இணைக்கப்பட்டுள்ள படிவமாகும்.

(ஈ) "சுயேச்சைச் சின்னம்" எனப்படுவது ஒதுக்கீடு செய்யப்படாத சின்னமாகும்.

(உ) "அரசு" என்பது தமிழ்நாடு அரசு எனப்படும்.

(ஊ) "உள்ளாட்சி அமைப்புகள்" என்பது தமிழ்நாட்டிலுள்ள அனைத்து சிற்றூராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகள், பேரூராட்சிகள், மூன்றாம் நிலை நகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் ஆகியவற்றை உள்ளடக்கியதும் குறிப்பதுமாகும்.

(எ) "சாதாரணத் தேர்தல்" என்பது காலக்கெடுவிற்குப் பின் ஏற்பட்ட ஒரு காலியிடத்தை நிரப்பச் செய்ய நடத்தப்படும் தேர்தலாகும். மற்றும்

(ஏ) அரசியல் கட்சி என்பது மக்கள் பெயராண்மை நிதித்துவ சட்டப்பிரிவு 29ன் கீழ் இந்தியத் தேர்தல் ஆணையத்தால் அரசியல் கட்சியாக பதிவு செய்யப்பட்ட இந்திய குடியுரிமைப் பெற்றவர்களைக் கொண்ட ஒரு சங்கம் அல்லது அமைப்பு ஆகும்.

(ஐ) "ஒதுக்கப்பட்ட சின்னம்" என்பதாவது அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் சார்பாக, போட்டியிடும் வேட்பாளருக்கு என மட்டும் இந்தியத் தேர்தல் ஆணையத்தால் தனியாக ஒதுக்கீடு செய்யப்பட்டச் சின்னமாகும்.

(ஒ) "அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி" என்பது இந்தியத் தேர்தல் ஆணையத்தால், 1968-ம் ஆண்டு தேர்தல் சின்னங்கள் (ஒதுக்கீடு மற்றும் பங்கீடு) ஆணையின்கீழ், தேசியக் கட்சியாகவும், அல்லது தமிழ்நாடு மாநிலத்தில் மாநிலக் கட்சியாகவும் அங்கீகரிக்கப்பட்ட ஒவ்வொரு கட்சியைக் குறிப்பதும் உள்ளடக்கியதும் ஆகும்.

**(ஓ) "பதிவு செய்யப்பட்ட - அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சி" என்பது**

(*i*) 1968ம் ஆண்டு தேர்தல் சின்னங்கள் (ஒதுக்கீடு மற்றும் பங்கீடு) ஆணையின்கீழ் இந்தியத் தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட, தமிழ்நாடு மாநிலம் தவிர்த்த, பிற மாநிலங்களைச் சேர்ந்த மாநிலக் கட்சி;

(*ii*) 1968-ம் ஆண்டு தேர்தல் சின்னங்கள் (ஒதுக்கீடு மற்றும் பங்கீடு) ஆணையின்கீழ், இந்தியத் தேர்தல் ஆணையத்தால் பதிவு செய்யப்பட்டு ஆனால் தேசிய கட்சியாகவோ, அல்லது தமிழ்நாட்டில் மாநில கட்சியாகவோ அங்கீகரிக்கப்படாத, தமிழ்நாட்டைத் தலைமையிடமாகக் கொண்டுள்ள கட்சி;

(*iii*) 1968-ம் ஆண்டு தேர்தல் சின்னங்கள் (ஒதுக்கீடு மற்றும் பங்கீடு) ஆணையின்படி, இந்தியத் தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்டு ஆனால் பிறகு தேசியக் கட்சி நிலையிலிருந்து தனது தகுதியை இழந்த கட்சி;

(*iv*) 1968-ம் ஆண்டு தேர்தல் சின்னங்கள் (ஒதுக்கீடு மற்றும் பங்கீடு) ஆணையின்கீழ், இந்தியத் தேர்தல் ஆணையத்தால் பதிவு செய்யப்பட்டு ஆனால் தேசிய கட்சியாகவோ, அல்லது மாநில கட்சியாகவோ அங்கீகரிக்கப்படாத மற்றும் தமது தலைமை அலுவலகத்தை வேறு மாநிலங்களில் கொண்டுள்ள அரசியல் கட்சிகள்; தமிழ்நாட்டில் உள்ள தமது அலுவலக முகவரி, துணை விதிகள் மற்றும் அலுவலக பொறுப்பாளர்கள் போன்ற விபரங்களுடன் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

(2) இவ்வாணையில் உபயோகப்படுத்தப்படும் ஆனால், இவ்வாணையில் பொருள் வரையறுக்கப்படாத வார்த்தைகளோ அல்லது சொற்றொடரோ இருப்பின், அவற்றிற்கு, 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்திலோ (1994 தமிழ்நாடு சட்டம் 21) அல்லது அதன் தொடர்புடைய விதிகளிலோ அல்லது 1919-ம் ஆண்டு சென்னை நகர மாநகராட்சி சட்டத்திலோ (1919 தமிழ்நாடு சட்டம் IV) அல்லது 1971-ம் ஆண்டு மதுரை நகர மாநகராட்சி சட்டத்திலோ (1971 தமிழ்நாடு சட்டம் XV) அல்லது 1981-ம் ஆண்டு கோயம்புத்தூர் நகர மாநகராட்சி சட்டத்திலோ (1981 தமிழ்நாடு சட்டம் XXV) அல்லது 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி நகர மாநகராட்சி சட்டத்திலோ (1994 தமிழ்நாடு சட்டம் 27)

அல்லது 1994 ஆம் ஆண்டு திருநெல்வேலி நகர மாநகராட்சி சட்டத்திலோ (1994 தமிழ்நாடு சட்டம் 28) அல்லது 1994ஆம் ஆண்டு சேலம் நகர மாநகராட்சி சட்டத்திலோ (1994 தமிழ்நாடு சட்டம் 29) அல்லது 2008ஆம் ஆண்டு திருப்பூர் நகர மாநகராட்சி சட்டத்திலோ (2008 தமிழ்நாடு சட்டம் 7) அல்லது 2008ஆம் ஆண்டு ஈரோடு நகர மாநகராட்சி சட்டத்திலோ (2008 தமிழ்நாடு சட்டம் 8) அல்லது 2008ஆம் ஆண்டு வேலூர் நகர மாநகராட்சி சட்டத்திலோ (2008 தமிழ்நாடு சட்டம் 26) அல்லது 2008ஆம் ஆண்டு தூத்துக்குடி நகர மாநகராட்சி சட்டத்திலோ (2008 தமிழ்நாடு சட்டம் 27) அல்லது 2013ஆம் ஆண்டு தஞ்சாவூர் நகர மாநகராட்சி சட்டத்திலோ (2013 தமிழ்நாடு சட்டம் 24) அல்லது 2013ஆம் ஆண்டு திண்டுக்கல் நகர மாநகராட்சி சட்டத்திலோ (2013 தமிழ்நாடு சட்டம் 25) அல்லது 1920-ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்திலோ (1920 தமிழ்நாடு சட்டம் V) அல்லது அதன் தொடர்புடைய விதிகளிலோ இவ்வார்த்தைகளுக்கும் சொற்றொடர்களுக்கும் பொருள் வரையறுக்கப்பட்டிருப்பின் அச்சட்டத்திற்கும் விதிகளுக்கும் பொருந்தக்கூடிய அதன் பொருளையே குறிக்கும்.

(3) மேற்கண்டவாறு வரையறுக்கப்படாத வார்த்தை மற்றும் சொற்றொடர் ஏதேனும் இவ்வாணையில் மேலும் இருப்பின், அவற்றிற்கு தமிழ்நாடு சட்டத்திற்கு பொருந்தக்கூடிய அல்லது விளக்கமாக எடுத்துக் கொள்ளக்கூடிய, 1891ம் ஆண்டு தமிழ்நாடு பொது ஷரத்துச் சட்டத்தில் (1891 தமிழ்நாடு சட்டம் 1) கண்ட விளக்கங்கள் பொருந்தும்.

**3. கட்சி அடிப்படையில் நடைபெறவுள்ள தேர்தலுக்கான மாநிலத் தேர்தல் ஆணையத்தின் அறிவிக்கை வெளியிடுதல்.-**

இவ்வாணையைச் செயற்படுத்தும் வகையில், மாநில அரசைக் கலந்தாலோசித்து, மாநிலத் தேர்தல் ஆணையம் எந்தெந்த தேர்தல் கட்சி சார்புடையதாக நடத்தப்படும் அல்லது எவை கட்சி சார்பின்றி நடத்தப்படும் என்பதைக் குறித்து அவ்வப்போது அறிவிக்கை வெளியிடும்.

**4. மாநிலத் தேர்தல் ஆணையம் தேர்தல் சின்னங்களின் பட்டியலை அறிவித்தல் .-**

மாநிலத் தேர்தல் ஆணையம் அவ்வப்போது அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் அவைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள சின்னங்களின் பட்டியல், பதிவு செய்யப்பட்ட - அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சிகளின் பட்டியல், கட்சி அடிப்படையில் நடைபெறவுள்ள தேர்தல்/தேர்தல்களுக்கு ஒதுக்கப்பட்ட சின்னங்களின் பட்டியலையும், சுயேச்சையான சின்னங்களின் பட்டியலையும் மற்றும் கட்சி அடிப்படையில்லாத தேர்தல்/தேர்தல்களுக்கு சுயேச்சையான சின்னங்களின் பட்டியலையும்/பட்டியல்களையும் குறித்து அறிவிக்கை வெளியிடும்.

**5. சின்னங்கள் ஒதுக்கிடுதல் .-**

இவ்வாணையில் கண்டுள்ள வழிவகைகளின்படி போட்டியுள்ள ஒவ்வொரு தேர்தலிலும் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு வெவ்வேறு சின்னங்கள் ஒதுக்கீடு செய்யப்படும்.

**6. கட்சி அடிப்படையில்லாத தேர்தல்களுக்கு சின்னம் ஒதுக்கீடு செய்தல் .-** (1) கட்சி அடிப்படையில் நடைபெறாத போட்டியுள்ள தேர்தல்களில், வேட்பாளர்களுக்கு அத்தேர்தல்களுக்கென அங்கீகரிக்கப்பட்ட சுயேச்சைச் சின்னங்களிலிருந்து வரிசைக்கிரமமாக குலுக்கல் முறையில் சின்னங்கள் வழங்கப்படும்.

உதாரணம்: கட்சி அடிப்படையில்லாத ஒரு சிற்றூராட்சியின் ஒரு வார்டு உறுப்பினருக்கான தேர்தலில் ஐவர் போட்டியிடுவதாகக் கொள்வோம். சுயேச்சைச் சின்னங்கள் ஐந்து, முறையே (1) "திறவுகோல் " (2) "சீப்பு" (3) "கட்டில்" (4) "கார் " மற்றும் (5) "சங்கு" என்று இருந்தால், இவை வேட்பாளர்களுக்குக் குலுக்கல் முறையில் ஒதுக்கப்படும். குலுக்கலில் முதலில் எந்த வேட்பாளர் பெயர் வருகிறதோ அவருக்கு "திறவுகோல்" சின்னமும், இரண்டாவதாக வரும் வேட்பாளருக்கு "சீப்பு" சின்னமும் என்றவாறு சின்னங்கள் ஒதுக்கீடு செய்யப்படும். மூன்றே மூன்று வேட்பாளர்கள் இருந்தால் "திறவுகோல்" அடுத்த நபருக்கு "சீப்பு" மற்றும் "கட்டில்" ஆகிய முதல் மூன்று சின்னங்கள் மட்டுமே முறையே ஒதுக்கப்படும்.

(2) இப்படிப்பட்ட தேர்தலில், வேட்பாளர்கள் சின்னம் குறித்து தங்களுக்குள் உடன்பாடு செய்து கொண்டாலும், குலுக்கல் முறையில் மட்டுமே சின்னம் ஒதுக்கப்படும்.

**7. கட்சி அடிப்படையிலான தேர்தல்களுக்கு சின்னங்கள் ஒதுக்கீடு செய்தல் .-**

(1) கட்சி அடிப்படையில் நடைபெறும் ஒரு தேர்தலில், அங்கீகரிக்கப்பட்ட ஒரு கட்சியின் சார்பால் நிறுத்தப்படும் ஒரு வேட்பாளர் அக்கட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட சின்னத்தை மட்டுமே தேர்ந்தெடுக்கலாம். அவருக்கு அக்கட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட சின்னம் மட்டும் ஒதுக்கப்படுமே தவிர, வேறு எந்த சின்னமும் ஒதுக்கப்படமாட்டாது.

தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனு அல்லது படிவம் "B" அல்லது "C"- யில் வெகுவாக ஏற்பட்ட குறைபாட்டின் காரணமாக ஒதுக்கீடு செய்யப்பட்ட சின்னம் குறித்து முரண்பட்ட கோரிக்கைகள் இருந்தால், எந்தவொரு வேட்பாளருக்கும் "ஒதுக்கப்பட்ட சின்னம்" வழங்கப்படமாட்டாது. அவ்வேட்பாளர்கள் அனைவரும் சுயேட்சைகளாகக் கருதப்படுவதுடன் பிற சுயேட்சை வேட்பாளர்களுக்கு ஒதுக்கப்பட்ட பின்னர் மீதமிருக்கும் சுயேட்சை சின்னங்கள் ஒதுக்கப்படும்.

ஒரு தேர்தலில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி ஒன்றின் சார்பில் எந்தவொரு வேட்பாளரும் நிறுத்தப்படாத பட்சத்திலும், அக்கட்சிக்கென ஒதுக்கப்பட்ட சின்னம் அத்தேர்தலில் வேறெந்த வேட்பாளராலும் கோரப்படவோ அல்லது ஒதுக்கப்படவோ கூடாது.

(2) **பதிவு செய்யப்பட்ட - அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சை வேட்பாளர் சின்னங்கள் ஒதுக்கிடல்.-** எந்த ஒரு சுயேட்சை வேட்பாளரும், சம்மந்தப்பட்ட தேர்தலுக்கான சுயேட்சை சின்னங்களின் பட்டியலிலிருந்து மூன்று சின்னங்களைத் தேர்ந்தெடுத்து தான் விரும்பும் முன்னுரிமை வரிசைப்படி குறிப்பிட வேண்டும். பதிவு செய்யப்பட்ட - அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சியின் சார்பில் நிறுத்தப்படுகின்ற வேட்பாளர் அல்லது அவர் சார்பில் வேட்பு மனு தாக்கல் செய்யும்போது அவர் விரும்புகின்ற சின்னங்களை கட்சி அடிப்படையிலானத் தேர்தலுக்கான சின்னங்களின் பட்டியலிலிருந்து ஒருங்கிணைந்தவாறு தேர்ந்தெடுத்து குறிப்பிடலாம். சின்னங்கள் கீழ்கண்ட முறைப்படி ஒதுக்கீடு செய்யப்படும்.

(அ) வேட்பாளர் கோரிய வரிசைப்படி சின்னம் ஒதுக்கீடு செய்வது பற்றி பரிசீலிக்கப்படும். அதாவது வேட்பாளர் முதலில் கோரிய சின்னம் முதலாவதாகவும், இரண்டாவதாகக் கோரிய சின்னம் இரண்டாவதாகவும், மூன்றாவது கோரிக்கை கடைசி கோரிக்கையாகவும் பரிசீலிக்கப்படும்.

ஒரு பதிவு செய்யப்பட்ட - அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சியின் சார்பாக போட்டியிடும் வேட்பாளருக்கு சின்னம் முதலில் ஒதுக்கப்பட்ட பின்னரே சுயேட்சை வேட்பாளருக்கு மீதமுள்ள சுயேட்சை சின்னங்களைக் கொண்டு ஒதுக்கீடு செய்யப்படும்.

(ஆ) ஒரே ஒருவரால் மட்டுமே அவரது முதல் தேர்வாக ஒரு சுயேச்சை சின்னம் கோரப்பட்டால், அந்தச் சின்னம் அவருக்கு மட்டுமேயல்லாது பிறருக்கு ஒதுக்கப்படமாட்டாது. ஒரு சுயேச்சைச் சின்னம் ஒன்றுக்கு மேற்பட்ட, வேட்பாளர்களால் முதல் தேர்வாகக் கோரப்பட்டால், அந்தச் சின்னம், குலுக்கல் முறையில், முதலில் யார் பெயர் தேர்ந்தெடுக்கப்படுகிறதோ அவருக்கு ஒதுக்கீடு செய்யப்படும்.

(இ) வேட்பாளர் ஒருவர் கோரிய முதல் விருப்பச் சின்னம், குலுக்கல் முறை மூலம் அவருக்கு ஒதுக்கீடு செய்ய இயலாது போனால், அவர் கோரிய இரண்டாவது விருப்ப சின்னத்தை அவருக்கு ஒதுக்கீடு செய்ய பரிசீலிக்கப்படும். முரண்பட்ட கோரிக்கைகளினாலும், குலுக்கலில் தேர்ந்தெடுக்கப்பட இயலாத பட்சத்திலும், இரண்டாவது விருப்ப சின்னமும் அவ்வேட்பாளருக்கு ஒதுக்கீடு செய்ய முடியாமற்போனால், அவரது மூன்றாவது விருப்ப சின்னத்தை ஒதுக்கிட பரிசீலிக்கப்படும். அவ்வாறு மூன்றாவது விருப்ப சின்னத்தையும் ஒதுக்கிட இயலாமற்போயின், பிற வேட்பாளர்களுக்கு ஒதுக்கீடு செய்தது போக மீதமுள்ள சுயேச்சை சின்னங்களில் ஒன்றை குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டு அவ்வேட்பாளருக்கு ஒதுக்கீடு செய்யப்படும்.

(ஈ) **பதிவு செய்யப்பட்ட** - அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சியின் சார்பாக போட்டியிடும் வேட்பாளர்களுக்கு சின்னம் ஒதுக்கீட்டில் முதலில் ஒதுக்கீடு செய்யப்பட்ட பிறகே மீதமுள்ள சுயேச்சை சின்னங்களை சுயேச்சை வேட்பாளர்களுக்கு அவர்கள் விரும்பும் முன்னுரிமை அடிப்படை வழிமுறையில் ஒதுக்கப்படும்.

**8. ஒரு வேட்பாளர் எப்போது அரசியல் கட்சி சார்பில் நிறுத்தப்படும் வேட்பாளர் எனக் கருதப்படுவார்**- (1) இவ்வாணையின் கருத்துக்கொப்ப, ஒரு வேட்பாளர் ஓர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் சார்பில் நிறுத்தப்படும் வேட்பாளராக கருதப்படவேண்டுமென்றால் ;

(அ) அவர் தனது வேட்பு மனுவுடன், கட்சி சார்பில் நிறுத்தப்படுவதற்கான படிவம் ' C '- யிலான உறுதிமொழியை இணைத்திருக்க வேண்டும் ;

(ஆ) வேட்பு மனுவைத் திரும்ப பெறும் நாளன்று மாலை 3.00 மணிக்குள், தேர்தல் நடத்தும் அலுவலரிடம், தான் கட்சி சார்பில் நிறுத்தப்படுபவர் என்பதற்கான எழுத்து மூலமான அறிவிப்பை படிவம் ' B '-ல் அளிக்க வேண்டும் ;

(இ) மேற்படி அறிவிப்பு, தொடர்புடைய கட்சியால் அவ்வறிவிப்பினைச் செ/ய அதிகாரம் பெற்ற தலைவர் அல்லது செயலாளர் அல்லது பிறிதொரு நிர்வாகி அல்லது அத்தகைய நிர்வாகியினால் அதிகாரமளிக்கப்பட்ட பிறிதொரு நபரால் கையொப்பமிடப்பட்டிருக்க வேண்டும்; மற்றும்

(ஈ) படிவம் ' B ' அளிக்க அதிகாரம்/அத்தாட்சிப் பெற்ற நபரின் பெயர் மற்றும் மாதிரி கையொப்பம் ஆகிய தகவல்கள் அடங்கிய படிவம் 'A' நிரப்பப்பட்டு வேட்பு மனு திரும்பப்பெறும் கடைசிநாள் மாலை 3.00 மணிக்குள் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் ஒப்படைத்திருத்தல் வேண்டும்.

(2) (அ) படிவம் 'A' தொடர்புடைய கட்சியால் அவ்வறிவிப்பினை செ/ய அதிகாரம் பெற்ற தலைவர் அல்லது செயலாளர் அல்லது பிறிதொரு நிர்வாகியினால் கையொப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும் ;

இருப்பினும், மேற்படி அலுவலர்களால் நேரடியாக ‘B’ கையொப்பமிடப்பட்டு வழங்கப்படும் நேர்வுகளில் படிவம் ' A ' வழங்கிட வலியுறுத்தப்பட வேண்டியதில்லை.

(ஆ) படிவம் 'C' மையினால் கையொப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும். படிவம் A மற்றும் B கையொப்பத்தின் சரியான ஒப்ப உருவ நேர்படியுடன் (facsimile signature) வழங்கப்படலாம். அச்சிடப்பட்ட/படிப்பெருக்கியிடப்பட்ட/ஒளி நகல் எடுக்கப்பட்ட படிவங்கள் A மற்றும் B பயன்படுத்தப்படலாம்.

**9. ஒரு அரசியல் கட்சியின் சிறு பிரிவோ அல்லது போட்டி பிரிவோ, தாம் தான் அக்கட்சி என்று கோரினால் .-** கட்சி அடிப்படையில் நடைபெறும் உள்ளாட்சி அமைப்பின் தேர்தலின்போது, அங்கீகரிக்கப்பட்ட ஓர் அரசியல் கட்சியின் எதிர் குழுக்கள் அல்லது பிரிவுகளோ தாங்கள்தாம் உண்மையான அங்கீகரிக்கப்பட்ட கட்சி என்ற கோரிக்கையை வைத்தால் அத்தகு குழுக்கள் அல்லது பிரிவுகளால் நிறுத்தப்படும் வேட்பாளர்களுக்கு சின்னங்கள் ஒதுக்கீடு செ/வது குறித்து மாநிலத் தேர்தல் ஆணையம் முடிவு மேற்கொள்ளும் . மாநிலத் தேர்தல் ஆணையத்தின் முடிவே இறுதியானதாகும்.

10. **இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் ஒருங்கிணைந்தால் .-** கட்சி அடிப்படையில் நடைபெறவுள்ள ஓர் உள்ளாட்சி அமைப்பின் தேர்தலின்போது, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் ஒருங்கிணைந்து ஒரு புதிய கட்சியாக உருவாகி, தேர்தல் சின்னங்கள் (ஒதுக்கீடு மற்றும் பங்கீடு) ஆணை, 1968ன் கீழ் அக்கட்சியின், அங்கீகாரத்திற்கான கோரிக்கை இந்தியத் தேர்தல் ஆணையத்திடம் நிலுவையிலிருந்தால், அக்கட்சிகளுக்கென ஒதுக்கப்பட்டிருந்த சின்னங்களில் ஏதேனும் ஒரு சின்னத்தை அக்கட்சியின் நிர்வாகிகள் (ஏற்கெனவே தனித்திருந்த ஒவ்வொரு கட்சியின் நிர்வாகியும்) ஒருங்கிணைந்து எழுத்து மூலம் கோரினால், அச்சின்னம் மாநிலத் தேர்தல் ஆணையத்தால், அக்கட்சிக்கு ஒதுக்கப்படும்.

11. **வழிமுறைகளையும், அறிவுரைகளையும் வழங்க மாநிலத் தேர்தல் ஆணையத்திற்கு உள்ள அதிகாரம்.-** மாநிலத் தேர்தல் ஆணையம் கீழ்க்கண்டவற்றிற்கு வழிமுறைகளையும் அறிவுரைகளையும் அறிவிக்கலாம்.

(அ) இவ்வாணையில் கண்டுள்ள பொருண்மைகளுக்கு சரியான விளக்கத்தைத் தருதல்

(ஆ) மேற்படி பொருண்மைகளுக்கு ஏற்படும் இடர்பாடுகளைக் களைதல்

(இ) இந்த ஆணையில் சின்னங்கள் ஒதுக்கீடு மற்றும் பங்களிப்பு சம்பந்தமாக பொருண்மை ஏதும் இல்லாத போதும், அல்லது போதுமான பொருண்மை இல்லாத போதும், சுமூகமான, ஒழுங்கான மற்றும் அமைதியான முறையில் தேர்தல் நடத்துவதற்காக தேர்தல் ஆணையம் பொருண்மை (Provision) அவசியம் என்று கருதுகின்ற போதும்.

## படிவம் A

**அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் /பதிவு செய்யப்பட்ட - அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சியின் வேட்பாளர் பெயரை அறிவிக்கும் அத்தாட்சி பெற்ற நபர்கள் பற்றிய கடிதம்**

(2016-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சித் தேர்தலுக்கான சின்னங்கள்
(ஒதுக்கீடு மற்றும் பங்கீடு) ஆணை பத்தி 8 (1)(ஈ) மற்றும் 8 (2)(அ))காண்க)

அனுப்புநர்
தலைவர்/செயலர்/நிர்வாகி
.......................................................... கட்சி

பெறுநர்
தேர்தல் நடத்தும் அலுவலர்,
வார்டு எண்.................
.................................. வட்டார ஊராட்சி/மாவட்ட ஊராட்சி
வார்டு எண்...................................................... பேரூராட்சி/மூன்றாம்நிலை நகராட்சி /
நகராட்சி/மாநகராட்சி.

ஐயா,

பொருள் ........................................................ -க்கான தேர்தல்கள் சின்னங்கள் ஒதுக்கீடு வேட்பாளர் பெயரை அறிவிக்கும் அத்தாட்சி பெற்ற நபர்..........

தமிழ்நாடு உள்ளாட்சித் தேர்தலுக்கான சின்னங்கள் (ஒதுக்கீடு மற்றும் பங்கீடு) ஆணை 2016ஆம் ஆண்டு பத்தி 8-ன் (1) (ஈ) மற்றும் 8 (2) (அ)-ல் கண்டுள்ளபடி அங்கீகரிக்கப்பட்ட/பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சியான ........................... ..................... என்ற கட்சியின் சார்பில் மேற்குறிப்பிட்ட தேர்தலில் வேட்பாளராக நிறுத்தப்படும் நபர்களின் பெயர்களை கீழ்க்கண்டுள்ள அத்தாட்சி பெற்றுள்ள நபர்கள் அறிவிப்பார்கள் என்பதை இதன் மூலம் அறிவிக்கிறேன்.

| | *அறிவிப்பு வெளியிடும் அத்தாட்சிபெற்ற நபரின் பெயர்* | *கட்சியில் அவர் வகிக்கும் பதவி* | *எந்த உள்ளாட்சிக்கு/ உள்ளாட்சிகளுக்கு அவர் அத்தாட்சி பெற்றவராகிறார்* | *படிவம் 'B'-ல் அறிவிப்பு வெளியிடும் அத்தாட்சி பெற்ற நபரின் மாதிரி கையொப்பம்* |
|---|---|---|---|---|
| | *(1)* | *(2)* | *(3)* | *(4)* |
| 1. | | | | (i)<br>(ii)<br>(iii) |
| 2. | | | | (i)<br>(ii)<br>(iii) |
| 3. | | | | (i)<br>(ii)<br>(iii) |
| 4. | | | | (i)<br>(ii)<br>(iii) |
| 5. | | | | (i)<br>(ii)<br>(iii) |

இடம்: கட்சியின் முத்திரை தங்கள் உண்மையுள்ள

நாள்: தலைவர்/செயலாளர்/நிர்வாகி
............................................. கட்சி

குறிப்பு: இக்கடிதம் வேட்பு மனுவைத் திரும்பப் பெறும் கடைசி நாள் மாலை 3.00 மணிக்குள் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் ஒப்படைக்கப்படவேண்டும்.

## படிவம் B

**அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி/பதிவு செய்யப்பட்ட - அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சியின் சார்பில் நிறுத்தப்படும் வேட்பாளர்கள் பெயர்கள் அறிவிப்பு**

**(2016ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சித் தேர்தலுக்கான சின்னங்கள் (ஒதுக்கீடு மற்றும் பங்கீடு) ஆணை பத்தி 8 (1) (ஆ) (இ) காண்க)**

அனுப்புநர்

.................................................

................................................. கட்சி

பெறுநர்

தேர்தல் நடத்தும் அலுவலர்,

வார்டு எண்.................

.................................. வட்டார ஊராட்சி/மாவட்ட ஊராட்சி

வார்டு எண்............................................ பேரூராட்சி/மூன்றாம்நிலை நகராட்சி /

நகராட்சி/மாநகராட்சி.

ஐயா,

பொருள் : ..............................................................க்கான தேர்தல் வேட்பாளர்கள் பெயர்கள் அறிவிப்பு

........

தமிழ்நாடு உள்ளாட்சித் தேர்தலுக்கான சின்னங்கள் (ஒதுக்கீடு மற்றும் பங்கீடு) ஆணை 2016ஆம் ஆண்டு பத்தி 8, துணைப்பத்தி (ஆ) மற்றும் (இ)ன்படி, கீழ்க்கண்ட நபர் எங்களது கட்சியின் சார்பில் வரவிருக்கும் உள்ளாட்சித் தேர்தலில் வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளார் என்பதை இதன் மூலம் அறிவிக்கிறேன்.

(1) வார்டின்/உள்ளாட்சி அமைப்பின் பெயர் ........................................................................

(2) அங்கீகரிக்கப்பட்ட வேட்பாளரின் பெயர் ........................................................................

(3) அங்கீகரிக்கப்பட்ட வேட்பாளரின் தந்தை/ கணவர் பெயர் ........................................................................

(4) அங்கீகரிக்கப்பட்ட வேட்பாளரின் முகவரி ........................................................................

(5) மாற்று வேட்பாளரின் பெயர் ........................................................................

(6) மாற்று வேட்பாளரின் தந்தை/கணவர் பெயர் ........................................................................

(7) மாற்று வேட்பாளரின் முகவரி ........................................................................

மேற்குறிப்பிட்ட வேட்பாளர்கள் எங்களது அரசியல் கட்சியின் உறுப்பினர்கள் எனவும் எங்களது அரசியல் கட்சியின் உறுப்பினர்கள் பட்டியலில் மேற்படி நபர்களின் பெயர்கள் இடம் பெற்றுள்ளதெனவும் சான்றளிக்கப்படுகிறது.

இடம்: கட்சியின் முத்திரை தங்கள் உண்மையுள்ள

நாள்: தலைவர்/செயலாளர்/நிர்வாகி/அத்தாட்சி பெற்ற நபர்

.............................................. கட்சி

குறிப்பு: (1) அங்கீகரிக்கப்பட்ட வேட்பாளரின் வேட்பு மனு ஆ/வின்போது நிராகரிக்கப்பட்டாலோ அல்லது அவ்வேட்பாளர் தன் வேட்பு மனுவைத் திரும்பப் பெற்றாலோ மாற்று வேட்பாளர் அங்கீகரிக்கப்பட்ட வேட்பாளராகக் கருதப்படுவார்.

(2) இக்கடிதம் வேட்பு மனு திரும்பப் பெறும் கடைசி நாள் மாலை 3.00மணிக்குள் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் ஒப்படைக்கப்படவேண்டும்.

**படிவம் C**

**அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின்/பதிவு செய்யப்பட்ட - அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சி சார்பில் நிறுத்தப்படும் வேட்பாளர் அளிக்கும் உறுதிமொழி**

**(தமிழ்நாடு உள்ளாட்சித் தேர்தலுக்கான சின்னங்கள் (ஒதுக்கீடு மற்றும் பங்கீடு) ஆணை 2016-ன் பத்தி 8 (1) (அ) காண்க)**

.....

........................................................................................ ஊராட்சி ஒன்றிய / மாவட்ட ஊராட்சி /பேரூராட்சி / மூன்றாம் நிலை நகராட்சி / நகராட்சி / மாநகராட்சி வார்டு எண் .................................. உறுப்பினர் தேர்தலில், திரு/திருமதி/செல்வி ......................... ............................... என்கிற நான், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியான / பதிவு செய்யப்பட்ட - அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சியான ...................................................... என்ற கட்சியின் சார்பில் வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளேன் என்று இதனால் உறுதியளிக்கிறேன்.

இடம்:

நாள்: வேட்பாளரின் கையொப்பம்.

குறிப்பு : படிவம் மையினால் கையொப்பமிடப்படவேண்டும்.

---

(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)

சென்னை-600 106,
2016, செப்டம்பர் 9.

T.S. RAJASEKAR,
*செயலாளர்,*
*தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்.*

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU